OS.26/2021

Dated.13.07.2023

Name : பவுன்ராஜ் (PW1)

Time: 12.10 PM

<u>4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1. சிந்தலக்காள் கமுதியிலிருந்து சுமார் 5 கி.மீ. துாரத்தில் உள்ள பாம்புல்நாயக்கன்பட்டியில் வசித்து வருகிறார்.

2. சிந்தலக்காளிடம் இருந்து விபரம் கேட்டு தெரிந்து வழக்கறிஞரிடம் வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரங்களை நான் தான் கூறினேன்.

3. சிந்தலக்காளின் மகனான இளங்கோவன் என்பவர் கிரையம் பெற்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. சிந்தலக்காளிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். தாவா விபரங்கள் தெரியும் என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் வழக்கின் விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

4. வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சிந்தலக்காள் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியளிக்க போதுமான நல்ல உடல் நலத்துடனும், நல்ல மன நிலையிலும் உள்ளார் என்றால் சரியல்ல. அவரது வயது முதிர்வின் காரணமாக அவரால் வெளி இடங்களுக்கு செல்ல இயலவில்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வயது முதிர்வினால் அவரால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றாலும் வழக்கறிஞர்/ஆணையரை நியமித்து அவரை விசாரணை செய்திருக்க இயலும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு விசாரணை செய்யும் பட்சத்தில் அவரது சாட்சியம் வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் என் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தின் சர்வே எண்.38/4A ஆகும். பரப்பளவு 33.5 செண்ட்

13.5 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்து உள்ள கிராமத்தில் தான் நான் சிறு வயது முதல் வசித்து வருகிறேன். 2015ம் ஆண்டு சோலார் நிறுவனம் எங்கள் பகுதியில் உள்ள நிலங்களில் சோலார் பேனல் அமைக்கும் போது நான் ஊரில் தான் இருந்தேன். அதன் பின்னர் தான் எங்கள் ஊர் பகுதியில் உள்ள நிலங்களின் மதிப்பு கூடியது என்றால் சரிதான்.

7. தாவா சொத்தின் மதிப்பு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் ஒரு செண்ட் நிலம் 1 இலட்சம் முதல் ஒன்றரை இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்தில் அமைந்துள்ள ஓட்டு வீட்டின் மதிப்பு 8 முதல் 10 இலட்சம் வரை இருக்கும்.

8. தாவா சொத்தின் பட்டாவில் நஞ்சை என்றோ புஞ்சை நிலம் என்றோ குறிப்பு இல்லாமல் மற்றவை என்று குறிப்பு உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

9. தாவா சொத்தின் மதிப்பு குறைத்து மதிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்ததால் நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

10. இளங்கோவன் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வராத, தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத கிரைய ஆவணம் என்றால் சரியல்ல.

11. தாவா சொத்தை சிந்தலக்காள் 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை சிந்தலக்காளிடம் கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் கிரைய காலத்திற்கும் பின்பும் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

12. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 2ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி கிரையம் பெற்று 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

13. 2015, 2016ம் ஆண்டுகளிலேயே 4ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை

கிரையம் பெற்ற விபரம் எனக்கு கிரைய காலத்திலேயே தெரியும் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் சிந்தலக்காளை விசாரித்தால் மட்டுமே உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரியல்ல.

14. தாவா சொத்துக்களின் அனுபவம் மற்றும் பாத்தியம் 4 முதல் 8 பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.